# கல்லூரிப் பாடல்

நாடெங்கும் வளர்ந்திடும் நல்லப்பெண் கல்வி
நாளும் சிவமோங்கும் நெல்லையில் நிலைத்திட
காடெங்கும் திருத்திக் கண்ணும் கருத்துமாக
காந்திமதி ஆட்சியில் காட்சி தந்ததுவே.
மேடெங்கும் செழித்து மேனி பெருகும்
மாணிக்க விளைவைக் கல்வியில் காட்டி
ஏடெங்கும் புகழும் ஏற்றத்தில் நிலைத்து
என்றென்றும் வளருக எங்கள் கல்லூரி.

குற்றால அருவிபோல் குளிர்ந்துகண் திறந்திட
குன்றெனும் பொதிகைத் தென்றலாய் மலர்ந்திட
வற்றாத கல்வியை வளமுடனே பொழிந்திட
வல்லோர் தம் வாழ்த்தினை வேண்டுதும் நாமே.
மாற்றோர் சுட்டுகின்ற மாண்பினைக் காட்டி
மதியொளி நிலவிட அகவிருள் விலக்கிட
கல்லால மரத்தின் விழுதாய்த் தழைத்து
காலத்தை வெல்லும் கல்வியைப் போற்றுவோம்.   (நாடெங்கும்)